# ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு

ஜெ. சி. ரைல்

சவறின் கிரேஸ் வெளியீடுகள்

ஆவிக்குரிய பிள்ளை வளர்ப்பு

Sovereign Grace Publications
P O Box 62 159, Sylvia Park, Auckland, NZ

ஆசிரியர்:
**ஜெ. சி. ரைல்**

நூல் வடிவமைப்பு:
M. **ஜேம்ஸ்**

நூல் வடிவமைப்பு விவரங்கள்:
எழுத்து: 10.75/14 வள்ளுவன்;
நூல்: 5.6" x 8.6"; பக்கங்கள்: 72

முதல் பதிப்பு: ஜூன் 2013, இந்தியா

கிடைக்குமிடம்:
6/87 காமராஜர் தெரு,
திருவள்ளுவர் நகர், அயனாவரம்,
சென்னை 600023, தமிழ்நாடு, இந்தியா.
தொலைப்பேசி: +91 9445671113

Available at:
6/87 Kamarajar Street,
Thiruvalluvar Nagar, Ayanavaram,
Chennai 600023, Tamilnadu, India.
Mobile: +91 9445671113

# பொருளடக்கம்


பதிப்புரை ............ 5

ஜோன் சார்ள்ஸ் ரைல் (ஜெ. சி. ரைல்) ............ 5

இந்த நூல்பற்றி . . . ............ 8

பலரின் உழைப்பு ............ 13

முகவுரை ............ 15

1 முதலாவதாக, பிள்ளைகளை சரியானவிதத்தில் நீங்கள் வளர்க்க வேண்டுமானால், அவர்களுடைய விருப்பத்தின்படி அல்லாமல், அவர்கள் நடக்கவேண்டிய வழியில் அவர்களை வளர்க்க வேண்டும். ............ 19

2 மென்மையோடும், அன்போடும், பொறுமையோடும் பிள்ளைக்குப் பயிற்சி கொடுங்கள். ............ 20

3 பிள்ளையை சரியானபடி வளர்க்கும் பெரும் பொறுப்பு உங்கள் கையில்தான் இருக்கிறது என்கிற எண்ணம் எப்போதும் உங்கள் மனதில் இருக்கட்டும் ............ 24

4 பிள்ளையின் ஆத்துமாவின் நலனைக் குறிக்கோளாகக் கொண்டே எப்போதும் பிள்ளை வளர்ப்பில் ஈடுபடுங்கள். ............ 27

5 வேத அறிவைப் பெற்றுக்கொள்ளும்படியாக உங்கள் பிள்ளைகளை வளருங்கள் ............ 29

6 ஜெபிப்பதற்கு அவர்களைப் பழக்கப்படுத்துங்கள் ............ 33

7 பொதுவான கிருபையின் சாதனங்களை (Means of Grace) பிள்ளைகள் ஊக்கத்தோடும் தவறாமலும் கடைப்பிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். ............ 37

8 உங்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கும்படி பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள் ........ 40

9 கீழ்ப்படியும் வழக்கத்தைக் கொண்டவர்களாக இருக்கும்படி பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள். ........ 43

10 எப்போதும் உண்மையே பேச வேண்டுமென்கிற பழக்கத்தைக் கொண்டிருப்பவர்களாக இருக்கும்படி அவர்களுக்கு பயிற்சியளியுங்கள். ........ 46

11 எப்போதும் நேரத்தை மீதப்படுத்துகிறவர்களாக இருக்கும்படி அவர்களைப் பழக்கப்படுத்துங்கள். ........ 48

12 அதிக செல்லம் கொடுத்துவிடக் கூடாதென்ற பயத்தோடு பிள்ளைகளுக்கு பயிற்சி அளியுங்கள். ........ 51

13 கடவுள் தம்முடைய பிள்ளைகளுக்கு எப்படி பயிற்சியளிக்கிறார் என்பதைத் தொடர்ந்து நினைத்துப் பார்த்து உங்களுடைய பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுங்கள். ........ 56

14 உங்களுடைய இடைவிடாத முன்மாதிரியான நடத்தை உங்களுடைய பிள்ளைகளில் ஏற்படுத்தக்கூடிய செல்வாக்கை மனதில் வைத்திருந்து பிள்ளைகளுக்குப் பயிற்சி அளியுங்கள். ........ 61

15 பாவத்தின் வல்லமையை எப்போதும் உணர்ந்தவர்களாக பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுங்கள். ........ 63

16 வேத வாக்குத்தத்தங்களை எப்போதும் நினைவில் வைத்தவர்களாக பிள்ளைகளுக்கு பயிற்சியளியுங்கள். ........ 65

17 இறுதியாக, நீங்கள் எடுக்கின்ற அத்தனை முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்படும்படி தொடர்ந்து ஜெபத்தோடு பிள்ளைகளுக்கு பயிற்சி அளியுங்கள் ........ 67

முடிவுரை ........ 69

# பதிப்புரை

**ஜோன் சார்ள்ஸ் ரைல் (ஜெ. சி. ரைல்)**

*இந்த நூலைப்பற்றிய அவசியமான சில எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளுவதற்கு முன் நூலின் ஆசிரியரான ஜோன் சார்ள்ஸ் ரைலைப் பற்றிய சில வார்த்தைகளை அறிமுகமாகத் தர வேண்டியது அவசியம். ஜோன் சார்ள்ஸ் ரைல் மே மாதம் 10 ஆம் தேதி, 1816 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் இங்கிலாந்தின் திருச்சபை என்று அழைக்கப்படும் ஆங்கிலிக்கன் சமயப்பிரிவான சர்ச் ஆப் இங்கிலாந்தில்* (Church of England) *அங்கத்தவர்களாக, பெயர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். அவர்களுக்கு மனந்திரும்புதலிலும், விசுவாசத்திலும் எந்த அக்கறையும் இருக்கவில்லை.*

*தன்னுடைய ஆரம்பக் கல்வியையும் பின்னர் உயர் கல்வியையும் முறையே இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற ஈடன் கல்லூரி, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கற்ற ரைல் தரமான கல்வியை வாழ்க்கையில் பெற முடிந்தது. அத்தோடு ஆக்ஸ்போர்டில் அவர் கிரிக்கெட் அணித் தலைவராக இருந்து பல்கலைக்கழகத்தில் பலரது மதிப்பையும் பெற்றவராயிருந்தார். கிரிக்கெட் அணித்தலைவராக இருந்தது தன் வாழ்க்கையில் நல்ல சமூக பழக்கவழக்கங்களையும், தலைமைத்துவத்துக்கான அனுபவத்தையும் தந்ததாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.*

*இருந்தபோதும் ஆக்ஸ்போர்டில் உயர் கல்வியை முடித்த*

பிறகு தன்னுடைய 21ம் வயதிலேயே ரைல் கர்த்தரை விசுவாசிக்கும் அனுபவத்தை அடைந்தார். அவருடைய வாழ்க்கையில் அக்காலத்தில் ஏற்பட்ட ஒரு நோயும், பிரசங்க செய்தி அளித்த ஒரு பிரசங்கியாரும், கையில் கிடைத்த நல்ல சில கிறிஸ்தவ நூல்களும் அவர் கிறிஸ்துவை மனந்திரும்பி விசுவாசிப்பதற்கு கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்திருக்கின்றன.

ரைலிடம் காணப்பட்ட திறமைகளையும், விசுவாசத்தின் கிரியைகளையும் கவனித்த கிஸ்போர்ன் என்ற இங்கிலாந்து திருச்சபை ரெக்டர் (Rector), ரைலை எக்ஸபெரி எனுமிடத்தில் இருந்த சபைக்கு கியூரேட்டராக (Curator) இருக்கும்படி கேட்டுக்கொண்டார். இது ரைலின் பெற்றோர்களுக்கு பிடித்தமில்லாததாக இருந்தது. இது பற்றி விளக்கும் ரைல், “கிறிஸ்தவ ஊழியத்திற்கு வர வேண்டும் என்ற எந்தவிதமான விசேஷ ஆர்வத்தையும் நான் கொண்டிருக்கவில்லை, இருந்தாலும் அதைத் தவிர வேறு எதையும் செய்யும்படி எனக்கு வேறு வாசல்களும் திறந்திருக்கவில்லை” என்றும் குறிப்பிடுகிறார். இவ்வாறாக வழமையான வழிகளிலல்லாமல் கிறிஸ்தவ ஊழியத்துக்குள் காலடி எடுத்துவைத்த ரைல் பின்பு இங்கிலாந்து திருச்சபையில் சுவிசேஷக் கிறிஸ்தவத்திற்கு குரல்கொடுத்த அதிமுக்கிய தலைவராக உருவெடுத்தார்.

முதல் முப்பத்தி ஆறு வருடங்களுக்கு கிராமப்புற சபைகளில் பணிபுரிந்தார் ரைல். அக்காலத்தில் ரைலின் பெயர் எங்கும் பரவ ஆரம்பித்தது. 1841ல் வின்செஷ்டர் என்ற இடத்தின் சபைக்கு அவர் பிஷப்பாக நியமிக்கப்பட்டார். இப்படியாகத் தொடர்ந்த ரைலின் ஊழியப் பணி இறுதியில் லிவர்பூலின் முதல் பிஷப்பாக நியமிக்கப்படுவதில் போய் நிறைவானது. அவர் தனது 64ம் வயதில் லிவர்பூல் பிஷப்பானார். 1844ல் ரைல் மெடில்டா பிளம்ப்ரி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் அப்போது அவருக்கு 28 வயது. மணப்பெண்ணுக்கு 22 வயது. இருவருக்கும் ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். அவருடைய முதல் மனைவி மெடில்டா 1847ல் மரணமானார். ரைல் 1849ல் ஜெசி வோக்கர் என்ற பெண்ணை மறுமணமுடித்தார். அவர்களுடைய பத்து வருட மணவாழ்க்கையில் ஜெசி உடல்நலக் குறைவோடேயே

வேதபூர்வமானவையும், நடைமுறைக்கு அவசியமானவையுமா யிருக்கின்றன. உண்மையில் பிள்ளைகளின் வாழ்க்கை வீண்போகாமல் அவர்கள் நல்லமுறையில் எதிர்காலத்தில் ஒழுங்கோடு கர்த்தருக்காக வாழப் பயனளிக்கும் அருமையான ஆலோசனைகள். நம்மினத்துப் பிள்ளைகள் இந்த முறையில் வளர முடிந்தால் இந்த சமுதாயத்துக்கு அவர்கள் எத்தனை ஆசீர்வாதமாக இருப்பார்கள் தெரியுமா? இந்த விஷயத்தில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற பிரச்சனைக்கே இடமில்லை. பெற்றோர்களாகிய நீங்கள் மனது வைத்தால்தான் இது முடியும். இது உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்களுக்கு முதலில் மனந்திரும்புதல் இந்த விஷயத்தில் ஏற்பட வேண்டும். உங்கள் தவறுகளைப் பார்க்கும் ஆத்மீகக் கண்கள் உங்களுக்கு வேண்டும். நம்மினத்து சமுதாய அழுக்குகளை தூக்கியெறிகிற ஆவிக்குரிய தைரியமும், பக்குவமும் வேண்டும். அழுகலான பாரம்பரியத்தைத் தொடர்ந்து பாதுகாப்பதற்காகத்தான் திருமணம், குடும்பம் என்ற எண்ணங்களையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு அன்பான மனைவியோடு அன்பின் அடிப்படையிலான தனிக்குடித்தனத்தை ஆரம்பித்து பிள்ளைகள் நமக்குக் கர்த்தர் தந்திருக்கும் ஈவுகள் என்றும், அவர்களை சரியாக வளர்க்காவிட்டால் கர்த்தரின் நீதிஸ்தலத்தில் தலைகுனிந்து நிற்கவேண்டுமே என்ற கர்த்தருக்குகந்த பயத்தோடும், ஜெபத்தோடும் இன்றே பிள்ளை வளர்ப்பில் முறையாக ஈடுபட்டால்தான் ரைலின் ஆலோசனைகளுக்குப் பொருளுண்டு. இதைச் செய்ய முடியுமா உங்களால்? யாராவது இதையெல்லாம் சொல்லித் திருத்தவில்லையே என்ற குற்றச்சாட்டை மட்டும் நீங்கள் இனி எழுப்ப முடியாது. ஆண்டவர் இந்தப் பெரிய பாரமான பிள்ளை வளர்ப்பாகிய ஆவிக்குரிய கடமையில் உங்கள் ஒவ்வொருவரோடும் இருந்து உதவட்டும்.

## பலரின் உழைப்பு

ரைலின் இந்த நூலைத் தமிழில் வெளியிட வேண்டுமென்று நான் தீர்மானித்தபோது முதல் கட்டமாக சகோதரி வினோதா அதன் ஆரம்ப மொழிபெயர்ப்பை செய்துதவினார். அதற்கு அடுத்த கட்டமாக, நூறு வருடங்களுக்கு முன்பெழுதப்பட்ட ரைலின்

*ஆங்கில நடையை, ரைலின் நோக்கமும், கருத்தோட்டமும் எந்த விதத்திலும் மாறாமல் தற்கால நடைமுறைத் தமிழில் வாசகர்கள் வாசிப்பதற்கு இலகுவான விதத்தில் கொண்டுவரும் பணியை நான் செய்திருக்கிறேன். மொழிபெயர்ப்புத்தானே என்று அசட்டையாக எதையும் அகற்றிவிடாமலும், அதேவேளை ஆங்கில மொழிவழக்கை தமிழுக்கேற்றவிதத்திலும் அமைத்திருக்கிறேன். என்னோடு இணைந்து நூலில் பலதடவைகள் எழுத்துப் பிழைகளை சரிபார்த்தும், நூலை நல்ல முறையில் அமைத்தும், அட்டைப் படத்தைத் தயாரித்தும், அச்சிடும்வரைக்கும் அவசியமான அத்தனைப் பணிகளைச் செய்தும் பெருந்துணை செய்திருக்கும் சகோதரர் ஜேம்ஸின் பணியும் இதில் பெரிது. இவர்கள் எல்லோருக்கும் பதிப்பாசிரியர் என்ற முறையில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பெரியவர் ரைலின் இந்நூல் பிள்ளை வளர்ப்பில் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு நம்மினத்தில் பெருந்துணை செய்ய வேண்டும் என்ற ஜெபத்தோடும் வாஞ்சையோடும் உங்கள் முன் வைக்கிறேன். எல்லா மகிமையும் கர்த்தரையே சேரட்டும்.*

**ஆர். பாலா, போதகர்**
*சவறின் கிரேஸ் சபை*
*(சீர்திருத்த பாப்திஸ்து)*
*நியூசிலாந்து*

# முகவுரை

*பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.*
*– நீதிமொழிகள் 22:6*

*வேதவசனங்கள் பரிச்சயமான கிறிஸ்தவர்கள் எல்லோருமே இந்த வசனத்தை நன்றாக அறிந்திருப்பார்கள். நமக்குப் பழக்கப்பட்ட ஓர் இனிமையான பாடலைப்போல அது உங்களுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இந்த வசனத்தை நீங்களே அநேக தடவை கேட்டிருப்பீர்கள், படித்திருப்பீர்கள், இதைக் குறித்துப் பேசியுமிருப்பீர்கள். இதை மேற்கோளாகக்கூட காட்டியிருப்பீர்கள். இல்லையா? ஆனால், இதன் பொருளுக்கு எந்தளவுக்கு மதிப்புக்கொடுத்து பின்பற்றியிருக்கிறீர்கள்? இந்த வசனத்தில் அடங்கியுள்ள ஆழமான வேத போதனையை நன்றாக அறிந்து வைத்திருப்பவர்கள் சிலரே. இந்த வசனம் சுட்டிக்காட்டுகின்ற கடமையை நடைமுறையில் செயல்படுத்துகிறவர்கள் எத்தனை பேர் என்று பார்த்தால் அது நமக்கு அதிர்ச்சியைத் தருவதாயிருக்கும். என்ன, வாசகர்களே, நான் கூறுவது உண்மைதானே?*

*இந்த விஷயம் இதுவரை யாருமே அறிந்திராத புதிய விஷயம் என்று சொல்ல முடியாது. உலகம் எவ்வளவு பழமையானதோ அந்தளவுக்கு பழமை வாய்ந்த விஷயம் இது! உலகம் தோன்றி ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகள் கடந்து போயிருக்கின்றன. அது நமக்குக் கற்றுத்தந்திருக்கும் அனுபவ பாடங்கள் ஏராளம்! இப்போது நாம் பலவிஷயங்களைக் கற்றுக்கொள்ளுவதற்கான*